02.03.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

# 140 ஆண்டுகளுக்குப் பிறகு மிகக் குறைவான மழையால் வறட்சி: தோட்டக்கலை பயிர்களை பாதுகாக்கும் முறைகள்



மதுரை வேளாண்மை பல்கலைக்கழக கல்லூரியில் தோட்டக்கலை மரச் செடிகளுக்கு மேல் அமைக்கப்பட்டுள்ள நிழல் போர்வை. | படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

தமிழகத்தில் 13 லட்சம் ஹெக்டேரில் காய்கறிகள், பழங்கள், பூக்கள், வாசனை திரவிய செடிகள் உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் காய்கறிகள் மட்டும் 2 லட்சத்து 907 ஹெக்டேரில் சாகுபடி நடைபெறுகிறது. மதுரை மாவட்டத்தில் 18 ஆயிரத்து 500 ஹெக்டேரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

கடந்த 150 ஆண்டுகளில் மிகக் குறைந்த வடகிழக்கு பருவமழை அளவுகளை கணக்கிடும்போது 1876-ம் ஆண்டு மிகக் குறைவாக 163.5 மி.மீ. மழை பெய்தது. அதற்கு பிறகு

1974-ம் ஆண்டில் 233.4 மி.மீ. மழையும், கடந்த ஆண்டு 168.4 மி.மீ. மழையும் பெய்துள்ளதாக தெரியவந்துள்ளது. 140 ஆண்டு களுக்குப் பிறகு கடந்த ஆண்டு மிகக் குறைவாக வடகிழக்கு பருவமழை பெய்ததால் ஏற்பட்ட வறட்சியில் தோட்டக்கலை மரப்பயிர்களைக் காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர். வடகிழக்கு பருவ மழை கடந்த ஆண்டு ஏமாற்றியதே இந்த வறட்சிக்கு முக்கியக் காரணம் என கூறப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி யில் தோட்டக்கலை நீண்ட கால மரப்பயிர்கள் மா, பலா, தென்னை, வாழை, சப்போட்டா, மாதுளை, எலுமிச்சை, சீதாப்பழம், பப்பாளி, நெல்லி, மா போன்றவற்றைக் காப்பாற்ற தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

இதுகுறித்து மதுரை வேளாண்மை கல்லூரி தோட்டக் கலைத் துறைத் தலைவர் பேரா

சிரியர் வி.சுவாமிநாதன் கூறியதா வது: தோட்டக்கலை மரப்பயிர்களை இந்த வறட்சியிலும் காப்பாற்ற விவசாயிகள் முயற்சிக்க வேண்

டும். வாடகைக்கு லாரி தண்ணீரை வாங்கி ஊற்றும் அளவுக்கு தோட்டக்கலைப் பயிர்களில் வருமானம் கிடைப்பதில்லை.

அதனால், காய்ந்த இலை, சருகுகள், மக்குகள், தென்னை நார் கழிவுகளை ஒவ்வொரு மரத்தின் வேர்ப் பகுதியில் பரப்பினால் அவை வேரில் இருந்து நீர் ஆவியாவதைக் குறைத்துவிடும். குறைந்த தண்ணீரில் உயிர் பிழைக்க வாய்ப்பு உள்ளது.

தென்னை நார் கழிவுகளை வேர்ப் பகுதியில் பரப்பினால் ஒரு நாள் தண்ணீர் விட்டால் 10 நாட்களுக்கு அந்த மரத்தைப் பாதுகாக்கலாம். சிறிய கன்றுகள், செடிகளுக்கு மேலே தென்னை கூடை, நிழல் கூடை, தென்னை வாழை ஓலைகளை வைத்து நிழல் போர்வை அமைத்தால் கடுமையான சூரிய வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

இதுவரை சொட்டுநீர் பாசன முறையை பின்பற்றாதவர்கள் அதற்கு மாறலாம். சொட்டுநீர் பாசனத்தில் குறைந்த நீரைக் கொண்டு அனைத்து பயிர்களுக்கும் பாசனம் செய்யலாம். பானையில் சிறிய துளை போட்டு, அதைப் பஞ்சை வைத்து அடைத்து பானையில் தண்ணீர் ஊற்றி வேர்ப் பகுதியில் வைத்தால் அந்த துளை வழியாக சொட்டு சொட்டு நீர் கசிந்து மரங்கள், செடிகளின் வேர்களுக்கு செல்ல உதவலாம். இதனால் 15 நாள், 20 நாட்களுக்கு செடிகளைக் காப்பாற்ற முடியும். வறட்சியை தாங்கக்கூடிய பாக்டீரியா கிருமிகளைத் தெளிக்கலாம்.

சொட்டுநீர் பாசனம் செய்துள்ள வர்கள், காய்ந்த இலைகள், மக்குகள், தென்னை நார் கழிவுகளை செடிகள், மரங்கள் அடிப்பகுதியில் புதைத்தால் தண்ணீர் பாசனத்தை 3 நாள் முதல் ஒரு வாரம் வரை தள்ளிப்போடலாம். இடைப்பட்ட காலத்தில் 2001, 2002 ஆண்டுகளில் மழையில்லாமல் இதுபோன்ற வறட்சி ஏற்பட்டது. அப்போது நிறைய தோட்டக்கலை மரப்பயிர்கள் எடுக்கப்பட்டுவிட்டன. அதுபோன்ற சூழல் ஏற்படாமல் இருக்க இந்த முறைகளைப் பின்பற்றினால் நிரந்தரமாகவும், ஓரளவும் இந்த வறட்சியில் இருந்து தோட்டக்கலை மரப்பயிர் மற்றும் செடிகளைக் காப்பாற்றலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.மதுரை வேளாண்மை பல்கலைக்கழக கல்லூரியில் தோட்டக்கலை மரச் செடிகளுக்கு மேல் அமைக்கப்பட்டுள்ள நிழல் போர்வை.

தினமணி

## பசுமைப் பண்ணை காய்கறி அங்காடிகள் விரிவுபடுத்தப்படும்: அமைச்சர் செல்லூர் கே.ராஜூ



பசுமைப் பண்ணை காய்கறி அங்காடிகள் வட்டார அளவில் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

வேலூர் கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடி, காட்பாடியில் உள்ள பசுமைப் பண்ணை காய்கறி அங்காடியை புதன்கிழமை நேரில் ஆய்வு செய்த, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான பணிகள் வருகிற ஏப்ரல் மாதத்துக்குள் முடிக்கப்படும். 1.91 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 20 கிலோ இலவச அரிசி வழங்கப்பட்டு வருவதால், தற்போது வறட்சி ஏற்பட்ட போதிலும் மக்கள் பாதிக்கப்படவில்லை.

வாக்களித்த மக்களுக்காக சிறப்புத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

மாநிலம் முழுவதும் கூட்டுறவு வங்கிகளில் 12.30 லட்சம் விவசாயிகள் பெற்றிருந்த கடன் தொகை ரூ.5,318 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு, அதற்கான சான்று விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பிறகு 2.44 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,093 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதில், வேலூர் மண்டலத்தில் 10,847 விவசாயிகளுக்கு பயிர்க்கடனாக ரூ.43.37 கோடி அளிக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் தான் அதிகளவில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ரூ.6,000 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதிலும் தற்போது உள்ள 71 பசுமைப் பண்ணை காய்கறி அங்காடி மூலம் ரூ.63.9 கோடி மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாவட்டத் தலைநகரங்களில் உள்ள பசுமைப் பண்ணை காய்கறி அங்காடிகளை, வட்ட அளவில் விரிவுபடுத்த ஆயத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்ட கூட்டுறவு வங்கிகளை கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் மாநிலம் முழுவதிலும் உள்ள 6,420 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை, கூட்டுறவு வங்கிகளுடன் இணைத்து மைய வங்கி செயல்பாட்டில் (ஸ்ரீர்ழ்ங் க்ஷஹய்ந்ண்ய்ஞ்) கொண்டு வருவதற்காக ரூ.193 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2011-ஆம் ஆண்டில் அதிமுக அரசு ஆட்சிக்கு வந்த

போது கூட்டுறவு வங்கிகளில் ரூ.26,000 கோடியாக இருந்த வைப்புத் தொகை, தற்போது ரூ.57,000 கோடியாக உயர்ந்துள்ளது.

விவசாயிகளுக்கான சேவைகளை அதிகப்படுத்துவது, வெளிப்படைத்தன்மை, குடும்ப அட்டை ஒழுங்குபடுத்துதல் போன்ற தொலைநோக்குத் திட்டம் மாநில அரசிடம் உளளது என்றார்.

பேட்டியின்போது, மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நீலோபர் கபீல், சட்டப்பேரவை உறுப்பினர் என்.ஜி.பார்த்தீபன், மாவட்ட ஆட்சியர் எஸ்.ஏ.ராமன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**கூடுதல் மகசூல் பெற புதிய நெல் ரகம் பயிரிட அறிவுறுத்தல்**



தென் மாவட்ட நெல் விவசாயிகள் வருகிற சம்பா பருவத்தில் டிகேஎம். 13 என்ற நெல் ரகத்தை பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம் என ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார

வேளாண்மை உதவி இயக்குநர் கா.பாஸ்கரராஜ் தெரிவித்துள்ளார்.

படிக்காசுவைத்தான்பட்டியில் அறுவடைக்கு தயாராக இருந்த டிகேஎம் 13 பயிரை புதன்கிழமை பார்வையிட்ட பின்னர் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சம்பா பருவத்தில் பிபிடி 5204 என்ற டீலக்ஸ் பொன்னி நெல் ரகத்தினை ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்து வருகிறார்கள். இந்த நெல் ரகம் கடந்த 28 ஆண்டுகளாக சாகுபடியில் உள்ளது. 140 நாட்கள் வயதுடைய சன்ன நெல் ரகமாகும். மேலும் நுகர்வோரினால் சாப்பாட்டிற்கு அதிகளவில் விரும்பப்படுவதால் குவிண்டாலுக்கு ரூ.200 கூடுதலாக விலை கிடைக்கிறது.

ஆனால் கடந்த 4, 5 ஆண்டுகளாக இந்த ரகத்தில் கதிர் பருவத்தில் குலை நோய் தாக்குதலுக்கு இலக்காகி மகசூல் பாதிப்பு ஏற்படுகிறது. பால் பிடிக்கும் தருணத்தில் வறட்சிக்கு இலக்காகி மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதைக்கருத்தில் கொண்டு திருவூர் குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையத்தினால் டிகேஎம் 13 என்ற நெல் ரகம் வெளியிடப்பட்டுள்ளது.

இது டீலக்ஸ் பொன்னியைப் போன்று சன்ன நெல் மணிகளைத் தரக்கூடியது. இதனுடைய வயது 130 நாட்களாகும். டீலக்ஸ் பொன்னியை விட 10 நாள்களுக்கு முன்பாகவே, அறுவடை செய்யதுவிடலாம். மேலும் இந்த ரகமானது இலை சுருட்டு புழு, குருத்து பூச்சி, குலை நோய், தூங்க்ரோ வைரஸ் நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு தன்மை கொண்டது. மேலும் 10.7 சதவீதம் கூடுதல் மகசூலும் தரக்கூடியதாகும்.

நடப்பு ஆண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரம், படிக்காசுவைத்தான்பட்டியைச் சேர்ந்த முன்னோடி விவசாயி முருகானந்தராஜா தனது வயலில் 2 ஏக்கர் பரப்பில் பயிரிட்டுள்ளார். இதில், ஒரு ஏக்கருக்கு சராசரி 4.5 டன்னிலிருந்து 5.00 டன் வரை மகசூல் கிடைத்துள்ளது. எனவே தென் மாவட்டங்களைச் சேர்ந்த நெல் விவசாயிகள் டிகேஎம் 13 நெல் ரகத்தினை பயிரிட்டு அதிக மகசூல் பெற்று நாட்டின் உணவு உற்பத்தியினை பெருக்கிட வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

**பயறுவகைப் பயிர்களில் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க சிறப்புத் தொகுப்புத் திட்டம்**



அண்ணாகிராமம் வட்டாரத்தில் பயறுவகை சாகுபடிப் பரப்பை அதிகரிக்கும் பொருட்டு, சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக வேளாண் உதவி இயக்குநர் ஜெ.மல்லிகா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பயறுவகை சாகுபடி பரப்பை அதிகரிக்க சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ்

ஏக்கருக்கு ரூ. 2,000 மானியம் வீதம் உளுந்து விதை, திரவ உயிர் உரம், டி.விரிடி, நுண்ணுரம், டி.ஏ.பி முதலான இடுபொருள்கள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் விதத்தில் தெளிப்பு நீர் பாசனம் - மழை தூவுவான் கருவிகளுக்கு முறையே ரூ. 19,600 மற்றும் ரூ. 31,600 மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படும்.

சிறு, குறு விவசாயிகள் உரிய சான்றுகளை வட்டாட்சியரிடம் பெற்று விண்ணப்பிக்க வேண்டும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி குறைந்த வயதுடைய பயறு வகை பயிர்களைச் சாகுபடி செய்து, மகசூல் ஈட்ட ஆர்வமுள்ள விவசாயிகள், அண்ணாகிராமம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளும்படியும், தெளிப்பு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் சிட்டா, அடங்கல், நிலத்தின் வரைபடம், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றைத் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரிடம் அளித்து இணையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்ச் 21 வரை சிறப்பு முகாம்: 3 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி: ஆட்சியர்**

திருநெல்வேலி மாவட்டத்தில் மார்ச் 1முதல் 21வரையில் 3.04 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி அளிக்கப்படவுள்ளதாக, ஆட்சியர் மு. கருணாகரன் தெரிவித்தார்.



திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் ஊராட்சிக்கு உள்பட்ட வாணியங்குளத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் புதன்கிழமை, கோமாரிநோய் தடுப்பூசி முகாமைத் தொடங்கிவைத்து அவர் பேசியது: இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர்ப்புறங்கள், ஊராட்சிப் பகுதிகளில் கால்நடை பராமரிப்புத் துறையால் 12ஆவது சுற்றாக மார்ச் 1முதல் 21வரை தொடர்ந்து கோமாரிநோய் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படவுள்ளன. மாவட்டத்தில் 19 ஊராட்சி ஒன்றியங்களில் 3 லட்சத்து 4 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி அளிக்கப்படும். இதற்காக கால்நடை பராமரிப்புத் துறை மூலம் 83 குழுக்கள், ஆவின் நிறுவனம் மூலம் 5 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முகாம்கள் மூலம், 2 லட்சத்து 85 ஆயிரத்து 500 பசுக்கள், 18,500 எருமைகள் பயன்பெறவுள்ளன.

இதுதொடர்பாக, ஏற்கெனவே அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு கிராமசபைக் கூட்டம் நடத்தப்பட்டு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வருவாய்த் துறையும், உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து பணிபுரிய அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அந்தந்த ஊராட்சித் தலைவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் தங்களது பங்களிப்பை முழுமையாக அளித்து நூறு சதவீதம் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுவாழ்வுத் திட்ட களப்பணியாளர்கள், வன சுயஉதவிக் குழுக்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களும் கால்நடை வளர்ப்போருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி முகாமில் பங்கேற்கச் செய்ய வேண்டும். தடுப்பூசி குழுவினர் கிராமங்களுக்கு வரும்போது பொதுமக்களும், கால்நடை வளர்ப்போரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார் அவர்.

முகாமில், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ராஜேந்திரன், உதவி இயக்குநர் மாரிமுத்து, கால்நடை மருத்துவர்கள், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் பங்கேற்றனர்.